www.Padasalai.Net

C

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 50

### பகுதி - 1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க : 7 x 1 = 7

1. காய்ந்த இலையும், காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.
   அ) இலையும், சருகும் ஆ) தோகையும், சண்டும்
   இ) தாளும், ஓலையும் ஈ) சருகும், சண்டும்
2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
3. "பெரிய மீசை" சிரித்தார். தொகையின் வகை எது?
   அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
   இ) அன்மொழித் தொகை ஈ) வினைத் தொகை
4. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
   அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
   இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
5. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
6. காசி காண்டம் என்பது
   அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
   ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
   இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
   ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
7. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
   இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

### பகுதி - 2

#### பிரிவு - 1

குறுகிய விடையளிக்க : (9வது வினா கட்டாய வினா) 2 x 2 = 4

8. விடைக்கேற்ற வினா அமைக்க :
   அ) நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்கிறார் பாரதியார்.
   ஆ) திருந்திய மக்களை மற்ற உயிர்களினின்று பிரித்துக் காட்டுவது மொழி.
9. "எப்பொருள்" எனத் தொடங்கும் திருக்குறளை அடி மாறாமல் எழுதுக.

#### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க : 2 x 2 = 4

10. வசன கவிதை என்பது யாது?
11. 'வேங்கை' என்பதை தொடர் மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
12. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
13. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
    வடுக்காண் வற்றாகும் கீழ் - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

### பகுதி - 3

#### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க: 2 x 3 = 6

14. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது
    இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களை தொடர்களில் அமைக்க.
15. தோட்டத்தில் மல்லிகை பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
    இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.